


# எழுப்புதல் காலத்தில் திருச்சபை

"... இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்."

அப்போஸ்தலர் 2:47

ஆசிஷ் ராய்ச்சூர்

**இந்தப் புத்தகம் இலவசமாக மட்டுமே விநியோகிக்கப்பட வேண்டும்**
ஆல் பீப்பிள் சர்ச் & வேர்ல்டு அவுட் ரீச் ஊழியத்தால் அச்சிடப்பட்டு
விநியோகிக்கப்பட்டது, பெங்களூர், இந்தியா.
தற்போதைய பதிப்பு: 2023

**தகவல் தொடர்புக்கு**
All Peoples Church & World Outreach
# 319, 2nd Floor, 7th Main, HRBR Layout
2nd Block, Kalyan Nagar, Bangalore - 560 043
Karnataka, INDIA

Phone: +91-80-25452617
Email: **bookrequest@apcwo.org**
Website: **apcwo.org**

மேற்கோள் குறிப்பிடப்படாத, அனைத்து வேதாகம மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து எடுக்கப்பட்டவை. 1982ல் தாமஸ் நெல்சன் Inc., என்பவரால் © காப்புரிமை பெறப்பட்டது. அனுமதியோடு பயன்படுத்தப்பட்டது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளது.

**நிதி பங்குதாரர்கள்**
ஆல் பீப்பிள் சர்ச்சின் உறுப்பினர்கள், பங்குதாரர்கள் மற்றும் நண்பர்களின் நிதியுதவியின் மூலம் இந்த வெளியீட்டை இலவசமாக விநியோகிப்பது சாத்தியமாகிறது. இந்த இலவச வெளியீட்டின் மூலம் நீங்கள் பலனடைந்திருந்தால், ஆல் பீப்பிள் சர்ச்சிலிருந்து இலவச வெளியீடுகளை அச்சடித்து விநியோகிக்க உதவும்படி நிதியுதவி அளிக்க உங்களை ஊக்குவிக்கிறோம். தயவுசெய்து apcwo.org/give என்ற வலைதளத்திற்குச் சென்று பார்க்கவும் அல்லது உங்கள் பங்களிப்பை எவ்வாறு வழங்குவது என்பதைப் பற்றி இந்தப் புத்தகத்தின் பின்புறத்தில் எழுதப்பட்டுள்ள "ஆல் பீப்பிள் சர்ச்சில் பங்காளராய் இருத்தல்" என்ற பக்கத்தைப் பார்க்கவும். நன்றி!

**இலவச பயன்பாடுகள் மற்றும் தொடர்புடைய இணையதளங்கள்**
**பிரசங்கங்கள்:** apcwo.org/sermons | **புத்தகங்கள்:** apcwo.org/books
**திருச்சபை செயலி:** apcwo.org/app | **வேதாகமக் கல்லூரி:** apcbiblecollege.org
**மின்வழி கற்றல்:** apcbiblecollege.org/elearn | **ஆலோசனை:** chrysalislife.org
**இசை:** apcmusic.org | **ஊழியர்கள் ஐக்கியம்:** pamfi.org
**ஆல் பீப்பிள் சர்ச் வேர்ல்டு அவுட்ரீச்:** apcworldmissions.org

(Tamil - A Church in Revival)

"... இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்."

அப்போஸ்தலர் 2:47

எழுப்புதல்

# எழுப்புதல் காலத்தில் திருச்சபை

# பொருளடக்கம்

அறிமுகம்

1. எருசலேம் திருச்சபை 1

2. எழுப்புதல் காலத்தில் திருச்சபை 10

# அறிமுகம்

எழுப்புதல் என்பது தேவன் நம்மை சந்திக்கும் ஒரு காலமாகும். இது பரலோகத்திலிருந்து அருள்மாரி பொழிந்தருளப்படும் ஒரு காலமாகும். தேவன் நம்மை சந்திக்க வரும் காலத்தில் காரியங்கள் மிகவும் வித்தியாசமானதாக இருக்கும்! இந்தப் புத்தகம் எழுதப்பட்ட 2008 ஆம் ஆண்டின் துவக்கத்திலிருந்தே நாம் கர்த்தரிடமிருந்து பெற்றுக்கொண்ட வார்த்தை என்னவென்றால், அந்த ஆண்டு, ஆவிக்குரிய மற்றும் பொருளாதார ஆசீர்வாதம் பொழிந்தருளப்படுதலின் ஆண்டாக இருக்கும் என்பதுதான். நாம் எதைப் பெறுகிறோம் என்பது குறித்த அனைத்தையும் நாம் அறிந்திருக்க வேண்டிய அவசியமில்லை என்றாலும், அந்த ஆண்டு அருள்மாரி பொழிந்தருளப்படும் ஆண்டாக இருக்கும் என்று தேவன் சொல்வதை நாம் அறிந்திருந்தோம். அந்த வருடத்தின் பிற்பகுதியில்தான், நடந்த காரியங்களைப் பார்க்க ஆரம்பித்தோம். இப்போது தேவன் வாக்குத்தத்தம் பண்ணியதைநோக்கி நாம் சென்றுகொண்டிருக்கிறோம், மேலும் ஒரு எழுப்புதலை, அருள்மாரி பொழிந்தருளப்படுதலை, பரலோகத்திலிருந்து வரும் சந்திப்பை நமக்குத் தரவிருக்கிற காலத்தை வரவேற்க, நாம் நம்மை ஆயத்தப்படுத்திக்கொண்டிருக்கிறோம்.

எழுப்புதலை, அருள்மாரி பொழிந்தருளப்படுதலை அல்லது சந்திப்பை, அனுப்புமாறு நாம் தேவனிடத்தில் வேண்டிக்கொள்கிறோம். ஆனால் அது நிகழும்போது நாம் எழுப்புதலுக்கு ஆயத்தமாக இருக்கிறோமா? அது தோன்றும்போது, நாம் எழுப்புதலுக்கு ஆயத்தமாக இருக்க வேண்டும்!

எழுப்புதல் வரும்போது ஒரு திருச்சபை எப்படி இருக்கும்? நாம் ஒரு எழுப்புதலின் மத்தியில் இருக்கும்போது, உங்களுக்கும் எனக்கும் என்ன நடக்கும்–பரலோகத்திலிருந்து அருள்மாரி பொழிந்தருளப்படும்போதும், தேவனிடமிருந்து ஆவிக்குரிய சந்திப்பு நிகழும்போதும், திருச்சபை இப்போது நாம் காண்பதைப்போல் இருக்காது என்பது நிச்சயம். ஞாயிற்றுக்கிழமைகளில் திருச்சபையினராக நாம் கூடிவரும்போது, பொதுவாக போதகரின் பிரசங்கம் முடியும் வரை காத்திருப்போம். நம்மில் சிலர், ஒருவேளை அதன் ஒரு சில பகுதிகளில் தூங்கிவிட்டு, பிறகு வீட்டிற்குச் செல்லக் கூடும்! ஆனால் தேவனுடைய சந்திப்பு நிகழும்போது திருச்சபை மிகவும் வித்தியாசமானதாக இருக்கப்

போகிறது! தேவனுடைய அருள்மாரி பொழிந்தருளப்படுதலுக்கு ஆயத்தமாக இருங்கள்!

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!
ஆசிஷ் ராய்ச்சூர்

# 1
# எருசலேம் திருச்சபை

தேவனுடைய அசைவாடுதலைப் பெறும்போதும், தேவனிடத்திலிருந்து வரும் சந்திப்பின் காலத்திற்குள் நாம் பிரவேசிக்கும்போதும், திருச்சபை வாழ்க்கை எப்படி இருக்கும் என்பதைப் பற்றிய ஒரு காட்சியை அல்லது தரிசனத்தை நமக்கு வழங்குவதே இந்தப் புத்தகத்தின் நோக்கமாகும். அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தின் முதல் எட்டு அத்தியாயங்களை நாம் ஆய்வு செய்து, எருசலேமிலிருந்து வெளிப்பட்ட எழுப்புதலில் இருந்து சில முக்கியமான கருத்துக்களை நாம் எடுத்து ஆராய்வோம்—இது எருசலேம் திருச்சபையைப் பெற்றெடுத்த ஒரு சந்திப்பாக இருந்தது! “எழுப்புதல்” பற்றியும், பரலோகத்திலிருந்து பெற்றுக்கொண்ட சந்திப்பினால் பிறந்த எருசலேம் திருச்சபையில், திருச்சபை வாழ்க்கை எப்படி இருந்திருக்கும் என்பதைப் பற்றியும் நாம் கற்றுக்கொள்ளலாம்.

## ஐக்கியமும் ஜெபமும் எழுப்புதலை பிறப்பித்தது

எழுப்புதலுக்கான முன்னோடிகளில் ஒன்று எது? பரலோகத்திலிருந்து அருள்மாரி பொழியப்படுவதற்கு முன்பு எருசலேமில் இருந்த ஜனங்கள் உண்மையில், எப்படித் தங்களை ஆயத்தப்படுத்திக்கொண்டார்கள்? பரலோகத்திலிருந்து அருள்மாரி பொழியப்பட இருந்ததால், எருசலேமில் காத்திருக்கும்படி இயேசு தம்முடைய சீஷர்களுக்குக் கட்டளையிட்டிருந்தார். அவர்களுக்கு அவர் ஒரு குறிப்பிட்ட இடத்தைச் சுட்டிக்காட்டி, அங்கே காத்திருக்கும்படி அவர்களுக்குச் சொன்னார். அப்போஸ்தலர் 1:14ல் பரலோகத்திலிருந்து அருள்மாரி பொழியப்படுதலாகிய எழுப்புதலுக்கான முன்னோடி எது என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.

**அப்போஸ்தலர் 1:14**
**அங்கே இவர்களெல்லாரும், ஸ்திரீகளோடும் இயேசுவின் தாயாகிய மரியாளோடும், அவருடைய சகோதரரோடுங்கூட ஒருமனப்பட்டு, ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள்.**

எருசலேமில் இருந்த 120 சீஷர்களும் ஒருமனப்பட்டு ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள். இங்கே இரண்டு காரியங்களை கவனிக்க வேண்டும்.

## *ஒருமனம்–ஏக சிந்தையோடு இருத்தல்*

முதலாவதாக "ஒருமனம்," அதாவது, "ஏக சிந்தையோடு இருத்தல்" என்பதுதான் அதன் பொருள். அவர்கள் தொடர்ந்து ஒருமனதோடு இருந்தார்கள் என்று வேதாகமம் சொல்கிறது. அவர்கள் ஒருமனதாக ஆரம்பித்தது மட்டுமல்லாமல், தொடர்ந்து ஒருமனதுடன் செயல்படுவதில் நிலைத்திருந்தார்கள். எனவே, ஐக்கியம்–ஒன்றாக இருப்பது, ஏக சிந்தையோடு இருப்பது மற்றும் ஒரே நோக்கத்துடன் இருப்பது–மிகவும் முக்கியமானதாகும். ஒரே விஷயத்தை முன்னோக்கித் தள்ளுவது அல்லது ஒரே விஷயத்தை நோக்கி நகர்வது என்பது, தேவனுடைய ஆவி நம்மேல் ஊற்றப்படுவதற்கு ஒரு முக்கியமான முன்நிபந்தனையாகும். ஐக்கியத்தோடு வாழும் சூழ்நிலையில்தான், பரலோகத்திலிருந்து அருள்மாரி பொழியப்படும். அங்கு தேவன் தமது ஆசீர்வாதத்தைக் கட்டளையிடுகிறார்.

**சங்கீதம்** 133:1–3

1 **இதோ, சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது**?

2 **அது ஆரோனுடைய சிரசின்மேல் ஊற்றப்பட்டு, அவனுடைய தாடியிலே வடிகிறதும், அவனுடைய அங்கிகளின்மேல் இறங்குகிறதுமான நல்ல தைலத்துக்கும்,**

3 **எர்மோன்மேலும் சீயோன் பர்வதங்கள்மேலும் இறங்கும் பனிக்கும் ஒப்பாயிருக்கிறது; அங்கே கர்த்தர் என்றென்றைக்கும் ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் கட்டளையிடுகிறார்.**

இதன் பொருள் என்னவென்றால், பரலோகத்திலிருந்து அருள்மாரி பொழியப்படுதலைப் பெறுவதற்கான ஒரு ஆயத்தப் பணியாக, நீங்களும் நானும் ஆவியின் ஐக்கியத்தைக் காத்துக்கொள்வதற்குப் பெரும்முயற்சியுடன் செயல்பட வேண்டும்–அதாவது நாம் தேவனை வாஞ்சிப்பவர்களாகவும், அவரை அதிகமாய் தேடுகிறவர்களாகவும் இருக்க வேண்டும் என்ற இந்தப் பொதுவான நோக்கத்தை நாம் எப்போதும் நமக்கு முன்பாக வைத்திருக்க வேண்டும். பெயர், ஸ்தாபனம் மற்றும் உபதேச வேறுபாடுகளைப் பொருட்படுத்தாமல், சிறு சிறு சண்டைகளை ஒதுக்கி வைத்துவிட்டு, தேவனைத் தேடும் ஒரே நோக்கத்துடன், தேவனுடைய ஜனங்கள் ஐக்கியப்பட்டு ஒன்று கூடும்போது,

அவருடைய ஆவியின் பிரசன்னமும் வல்லமையும் பலமாய் பொழிந்தருளப்படும். தலை முதல் கால் வரை, பெரியோர் முதல் சிறியோர் வரை அனைவர் மீதும் அபிஷேகம், புத்துணர்ச்சி, ஆசீர்வாதம் மற்றும் ஜீவன் பெருமளவில் ஊற்றப்படும்!

## *ஜெபம் மற்றும் வேண்டுதல்*

இரண்டாவது காரியம், எருசலேமில் கூடிவந்திருந்த திருச்சபை ஜனங்கள் ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள். அவர்கள் ஜெபம், வேண்டுதல், பரிந்துபேசுதல் போன்றவற்றை தொடர்ந்து செய்துகொண்டிருந்தனர். அவர்கள் ஒருமனதாக ஒன்றுகூடி ஜெபம் மற்றும் வேண்டுதல்களை செய்துகொண்டே இருந்தனர்– இவைதான் தேவனுடைய வல்லமை பொழிந்தருளப்படுவதற்கான முன்னோடிகளாய் இருந்தன.

அடுத்த 50 வருடங்கள் திருச்சபைக்குச் சென்று, ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் இரண்டு மணிநேரம் செலவழித்து, உட்கார்ந்து அற்புதமான செய்திகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம், நன்றாக உணர்கிறோம், தேவனைப் பற்றிய நமது அறிவைப் பெருகச் செய்கிறோம், ஆனாலும்கூட, நாம் அறிந்துகொண்ட தேவனை நம் தனிப்பட்ட வாழ்க்கையில் அனுபவிக்காமல் இருந்தால், அதனால் நமக்கு எந்தப் பயனும் இருக்காது. தேவனைப் பற்றிய அறிவை பெருக்கிக்கொள்வது மற்றும் அவரை அனுபவிப்பது ஆகிய இரண்டும் வெவ்வேறு விஷயங்களாகும். கிறிஸ்தவம் வெறும் அறிவை அடிப்படையாகக் கொண்டது அல்ல. அது தேவனுடனான ஒரு அனுபவமாகும். திருச்சபையில் கலந்துகொள்வதில் மட்டுமே நாம் ஆர்வமுள்ளவர்களாய் இராமல், தேவனை அதிக வாஞ்சையோடு தேட வேண்டும்.

ஆகவே, ஒரே திருச்சபையினராக, “தேவனே, நாங்கள் ஒரு பொதுவான நோக்கத்தைக் கொண்டிருக்கிறோம். நாங்கள் உம்மை அதிகமாக வாஞ்சிக்கிறோம், நாங்கள் அனைவரும் இந்த விஷயத்தில் முற்றிலும் ஒருமனதோடு இருக்கிறோம்!” என்று பதிலளிக்க வேண்டும். இருப்பினும், சுயநல நோக்கம், சந்தேகம் மற்றும் போட்டி ஆகியவற்றிலிருந்து நம்மைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால், நமக்கு சுயநல நோக்கம் இருந்தால், அது சந்தேகத்திற்கு வழிவகுக்கும், மேலும் சந்தேகம் போட்டிக்கும், போட்டி பெரும் பிரிவிற்கும் வழிவகுக்கும். நாம் ஐக்கியத்தோடு இருப்பதால், இந்த உணர்ச்சிகளுக்கு எந்தவிதத்திலும்

இடமளிக்காமலும், எந்தவிதத்திலும் இவைகளை நமக்குள் நுழையவிடாமலும் இருக்க வேண்டும். நாம் ஒரே நோக்கத்துடன் ஒருமனதாக இருக்கிறோம்—அது என்னவென்றால், நாம் தேவனை அதிகமாக வாஞ்சிக்க வேண்டும்!

## "இதுதான்" "அது"

**அப்போஸ்தலர் 2:1–4**
**[1] பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள்.**
**[2] அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று.**
**[3] அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு அவர்கள் ஒவ்வொருவர்மேலும் வந்து அமர்ந்தது.**
**[4] அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்.**

*"பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி"* (அப்போஸ்தலர் 2:1,2அ). அவர்கள் ஒரே நோக்கத்தோடு ஐக்கியத்தில் தரித்திருந்தார்கள் என்பதைக் கவனியுங்கள். அவர்கள் ஒரே இடத்தில் ஒருமனதாகக் கூடியிருந்தார்கள், திடீரென்று, வானம் திறந்தது, தேவன் அவர்கள் மீது அக்கினி நாவுகளைப் பொழிந்தருளினார். அப்படித்தான்—ஆவி பொழிந்தருளப்படுதல் தொடங்கியது! இதுதான் நடக்கும் என்று இயேசு அவர்களுக்கு வாக்குப்பண்ணியிருந்தார், அது ஆரம்பமாகிவிட்டது.

பெந்தெகொஸ்தே நாளைக் கொண்டாட ஆயிரக்கணக்கான யூதர்கள் எருசலேமில் கூடியிருந்தனர். இந்த எண்ணிக்கை லட்சக்கணக்கான யூத மக்களிடம் சென்றிருக்கும் என்று வரலாற்றாசிரியர்கள் கூறுகிறார்கள். பின்னர், மேல் வீட்டறையில் இருந்த 120 சீஷர்கள் மத்தியில் ஒரு அற்புதமான சம்பவம் நடந்தது. அவர்கள் வெவ்வேறு பாஷைகளில் பேச ஆரம்பித்தார்கள், அந்தச் செய்தி உடனடியாகப் பரவியிருக்க வேண்டும். கொஞ்ச நேரத்தில், அங்கே கூடி வந்திருந்த திரளான ஜனங்கள், அவர்கள் அனைவரும் அந்நிய பாஷைகளில் ஜெபிப்பதையும் தேவனை மகிமைப்படுத்துவதையும் கேட்டார்கள் மற்றும் பார்த்தார்கள். அப்போது பேதுரு, கூடியிருந்தவர்களுக்கு ஒரு காரியத்தை

விளக்கிச் சொல்ல வேண்டும் என்று உணர்ந்தான், அதனால் அவன் எழுந்து நின்று, *“தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது”* (அப்போஸ்தலர் 2:16) என்று பேசினான். “இதுதான் அது” என்று சொன்னதன் மூலம், பழைய ஏற்பாட்டில் யோவேல் மூலமாக தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டதுதான் அன்று எருசலேமில் நடந்துகொண்டிருந்தது என்பதை பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலால் குறிப்பிட்டுச் சொன்னான்.

**யோவேல்** 2:28,29

[28] **அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்;**

**உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள்.**

[29] **ஊழியக்காரர்மேலும் ஊழியக்காரிகள்மேலும், அந்நாட்களிலே என் ஆவியை ஊற்றுவேன்.**

இப்போது பேதுரு உண்மையிலேயே என்ன சொன்னான்? அவன், “இதுதான் அது!” என்று சொன்னான். ஆனால் அந்த வசனத்தைப் பார்த்தால், “இது” “அது” இல்லை என்று முடிவு செய்கிறோம். ஏன்? ஏனென்றால், *“உன் குமாரரும் குமாரத்திகளும் தீர்க்கதரிசனம் உரைப்பார்கள், உங்கள் மூப்பர்கள் சொப்பனங்களைக் காண்பார்கள், உங்கள் வாலிபர்கள் தரிசனங்களை அடைவார்கள்”* என்று யோவேல் சொன்னார். ஆனால் இங்கே 120 பேர் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? அவர்களுக்குள் தரிசனங்களோ, சொப்பனங்களோ, தீர்க்கதரிசனங்களோ காணப்படவில்லை. மாறாக, பலத்த காற்றின் சத்தம், அக்கினிமயமான நாவுகள் மற்றும் ஜனங்கள் அந்நியபாஷைகளில் பேசுவது ஆகியவைதான் நடந்துகொண்டிருந்தன. எனவே “இது” உண்மையிலேயே “அது” அல்ல. நான் ஹெர்மனியூட்டிக்ஸ் / வேதவியாக்கியானம் பாடத்தைக் கற்பிக்கும்போது–வேதத்தை சரியாக வியாக்கியானம் செய்வது எப்படி என்று கற்பிக்கும்போது–எனது மாணவர்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என்றும், கிரேக்கம், வரலாறு, அந்தக் காலத்தின் கலாச்சாரம் மற்றும் பல காரியங்களைப் படிக்க வேண்டும் என்று அவர்களுக்குச் சொல்கிறேன். எனவே, நான் சுயமாக சிந்தித்து, என்ன நடந்துகொண்டிருந்தது என்பதைப் பகுப்பாய்வு செய்தால், “இது அது அல்ல!” என்பதே என்னுடைய முடிவாக இருக்கும். யோவேல், “பலமான காற்று அடிக்கிற முழக்கம்” பற்றிப் பேசவில்லை. யோவேல், “அக்கினிமயமான

நாவுகள்” பற்றியோ அல்லது “அந்நியபாஷைகளில் பேசுவது” பற்றியோ தீர்க்கதரிசனம் உரைக்கவில்லை. பெந்தெகொஸ்தே நாளில் நடந்த அடையாளங்கள் யோவேல் தீர்க்கதரிசனத்தில் இடம்பெற்றிருக்கவில்லை. ஆனால் பரிசுத்த ஆவியானவர் பேதுரு மூலம் “இதுதான் அது” என்று சொல்லிக்கொண்டிருந்தார். இது பற்றிய எனது அறிவுசார்ந்த பகுப்பாய்வின் முடிவை நான் வெளிப்படுத்தியிருக்கிறேன்!

இங்கே நாம் அனுமானிக்க வேண்டிய இரண்டு முக்கியமான காரியங்கள் உள்ளன.

## *தேவன் அவருடைய வார்த்தையை விட பெரியவர்*

முதலாவதாக, தேவன் அவருடைய வார்த்தை–வேதாகமத்தை விட பெரியவர். பெரும்பாலும், நாம் தேவனை அவருடைய வார்த்தைக்குள் பொருத்திவிட முயற்சி செய்கிறோம். தேவன் தாம் எழுதிய புத்தகத்தை விடவும் பெரியவர். அவர் எழுதிய புத்தகம் அவரைப் பற்றிய ஒரு சிறிய பகுதியை–அவர் முடிவில்லாத தேவன் என்பதை நமக்கு விவரிக்கின்றது. வேதாகமம் குறைவற்றது என்றும், தெய்வீகத்தன்மையால் ஏவப்பட்டது என்றும் மற்றும் பூமியில் நம் வாழ்க்கைக்கான இறுதி அதிகாரத்தைப் பெற்றிருக்கும் ஒன்று என்றும் நான் விசுவாசிக்கும் அளவுக்கு, வேதாகமம் முடிவில்லாத நம் தேவனை முழுமையாக விவரிக்கவில்லை என்பதை நான் அறிவேன். தேவன் தம்முடைய வார்த்தையில் ஒருபோதும் முரண்படமாட்டார். அவர் வெளிப்படுத்தியிருக்கும் காரியங்களில் எப்போதும் உண்மையாக இருப்பார். ஆனால், அவர் எழுதப்பட்டிருப்பதை விட மிகவும் பெரியவர்!

சில சமயங்களில், நாம் வேத வாக்கியங்களைப் பகுப்பாய்வு செய்யும்போது, “இதுதான்” “அது” என்று அர்த்தமல்ல, ஆனால் “இதுதான்” “அது” என்று தேவன் கூறுகிறார். ஏனெனில், யோவேல் ஆவியானவருடைய கிரியையைப் பற்றிப் பேசினபோது, அவர் ஆவியானவரின் முழுமையான கிரியைகளின் பட்டியல் அனைத்தையும் கொடுக்கவில்லை, அவர் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு பட்டியலை மட்டுமே கொடுத்தார்–அதாவது, தரிசனங்கள், தீர்க்கதரிசனங்கள் மற்றும் சொப்பனங்களின் பட்டியலை மட்டுமே கொடுத்தார். பெந்தெகொஸ்தே நாளில் நடந்ததும், ஆவியானவருடைய கிரியையாகத்தான் இருந்தது, அதோடு கூட–பலத்த காற்றின் முழக்கம், அக்கினிமயமான நாவுகள்

மற்றும் அந்நிய பாஷைகளில் பேசுதல் போன்ற வேறு சில கிரியைகளும் காணப்பட்டன. அவைகளும் கூட ஆவியானவரின் கிரியைகளாகவே இருந்தன. எனவே “இதுதான்” “அது.” ஆமென்!

எழுப்புதலில், நாம் ஞானத்துடனும் வெளிப்பாட்டுடனும் நடந்துகொள்ள வேண்டும். நமக்கு இரண்டுமே வேண்டியிருக்கிறது. சில நேரங்களில், நாம் ஞானத்துடன் மட்டுமே நடந்துகொள்கிறோம், வெளிப்பாட்டுடன் நடப்பதில்லை. வேத வாக்கியங்களின் முழு வரலாற்றையும் நாம் அறிவோம்–எபிரேயம், கிரேக்கம் மற்றும் மற்ற அனைத்தும் நமக்குத் தெரியும். பொதுவாகவே, “சரியான விஷயம்” என்ன என்பதை நாம் அறிவோம், ஆனால் தேவனுடைய “தற்போதைய விஷயம்” என்ன என்பது பற்றிய வெளிப்பாடு நமக்கு இல்லை. எனவே, நம்மிடம் திராட்சைரசத் துருத்தியாகிய “சரியான விஷயம்” உள்ளது, ஆனால் புதிய திராட்சை ரசமாகிய “தற்போதைய விஷயம்” இல்லை. நமது திராட்சரசத் துருத்திகள் புதிய திராட்சரசத்தைக் கொண்டிருக்க முடியாவிட்டால், நம்மால் புதிய திராட்சரசத்தைப் பெற முடியாது. அதை வரவேற்பதற்கும் அதில் நடப்பதற்கும், தேவன் “இப்போது” என்ன செய்கிறார் என்பதைப் பகுத்தறிவதற்கான ஞானமும் வெளிப்பாடும் நமக்குத் தேவை. “இப்போது” என்ற வார்த்தை கண்டிப்பாக எழுதப்பட்ட வார்த்தையுடன் முரண்படாது, ஆனால் தேவன் என்ன செய்கிறார் என்பதைப் புரிந்துகொள்ள “இப்போது” என்ற வார்த்தை நமக்கு வேண்டியதாய் இருக்கிறது.

### *எழுப்புதல்கள் அல்லது வல்லமை ஊற்றப்படுதல் ஒரே மாதிரியாக இருக்க முடியாது*

பேதுருவின் “இதுதான் அது” என்பதன் அடிப்படையில் நாம் கூற வேண்டிய இரண்டாவது முக்கியமான விஷயம் என்னவென்றால், இவ்விரண்டு எழுப்புதல்களும் அல்லது வல்லமை பொழிந்தருளப்படுதலும் ஒரே மாதிரியானவை அல்ல! அவைகளுக்கு இடையே ஒற்றுமைகள் இருக்கலாம், ஆனால் அவை ஒரே மாதிரியாக இருக்காது. யோவேல் தேவனுடைய ஆவி ஊற்றப்படுதலை விவரித்தார். பெந்தெகொஸ்தே நாளில் நடந்தது தேவனுடைய ஆவியின் உண்மையான வெளிப்பாடாக இருந்தது. “இது அருள்மாரி பொழிந்தருளப்படுதல்; இது ஒரு சந்திப்பு” என்று தேவன் கூறும்போது, “இது” சரியாக “அது” போல இல்லை என்று நாம் கூறலாம்! நாம் எழுப்புதல்களின்

வரலாற்றைப் படிக்கலாம், பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம், எழுப்புதலின் வடிவங்களைப் பெறலாம், ஆனால் தேவனை மட்டுப்படுத்தி ஒரு கட்டுப்பாட்டுக்குள் இருப்பவரைப்போல பாவித்து, எழுப்புதல் வேறு சில இடங்களில் நடந்தது போலவே இங்கும் நடக்க வேண்டும் என்று சொல்ல முடியாது! தேவனுடைய ஆவி பொழிந்தருளப்படுதலுக்குள் நாம் முன்னேறிச் செல்வதால், தேவனிடத்தில் மிகவும் திறந்த உள்ளத்தோடு இருக்க வேண்டும். தேவன் நம் மத்தியில் இப்போது என்ன செய்ய விரும்புகிறார் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். “ஒரு திருச்சபையாக தேவன் நம்மை எதற்கு நேராக வழிநடத்துகிறார்? இந்த நகரத்தைக் குறித்த தேவனுடைய சித்தம் என்ன?” என்பன போன்ற கேள்விகளை நமக்கு நாமே கேட்டுக்கொள்ள வேண்டும். உலகில் வேறு ஏதோ ஒரு இடத்தில் தேவன் கிரியை செய்தபோது ஏற்பட்ட எழுப்புதலைப்போலவே, நமது நகரத்திலும் எழுப்புதல் நடைபெறாது. இது முற்றிலும் புதியதாக இருக்கும், ஆனாலும், இது ஒரு எழுப்புதலாக, தேவனுடைய சந்திப்பாக, உன்னதத்திலிருந்து ஊற்றப்படும் வல்லமையாக இருக்கும்!

அப்போஸ்தலருடைய நடபடிகள் 2ஆவது அதிகாரத்தில் உள்ள பதிவிலிருந்து, உன்னதத்திலிருந்து ஆவி ஊற்றப்பட்டதால்தான் சபை பிறந்தது என்று பார்க்கிறோம்! உண்மையில், இதுதான் முதல் உள்ளூர் திருச்சபையாக இருந்தது.

**அப்போஸ்தலர்** 2:41
**அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத்தினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள்.**

ஒரே இரவில், 3000 பேர் கொண்ட ஒரு திருச்சபை உயிர் பெற்றது! அது எப்படி இருந்திருக்கும் என்றும்—அந்நாட்களில் அப்போஸ்தலர்களின் இடத்தில் நான் இருந்திருந்தால் எப்படி இருந்திருக்கும் என்றும் நான் அடிக்கடி கற்பனை செய்து பார்க்க முயற்சித்திருக்கிறேன்! அவர்கள் எந்த இறையியல் கல்லூரியிலும் படித்து பட்டம் பெறவில்லை, “திருச்சபை நிர்வாகம்,” “திருச்சபை வளர்ச்சிக் கோட்பாடுகள்” போன்ற எதைப் பற்றியும் எந்த அறிவுறுத்தலையும் பெற்றிருந்ததில்லை, எதுவும் அவர்களுக்கு இல்லை, ஆனாலும் கூட, ஒரே இரவில் அவர்களது சபையில் 3000 பேர் இருந்தனர்! திட்டமிடல் இல்லை, உத்திகள் இல்லை, முன் அறிவுறுத்தல்கள் இல்லை, பின்பற்றுவதற்கான முன்மாதிரி

யாரும் இல்லை, ஜி12-சிறு குழுக்கள் இல்லை—எதுவும் இல்லை—ஆனால் கிட்டத்தட்ட, கண் இமைக்கும் நேரத்தில் ஒரு திருச்சபை பிறந்துவிட்டது!

கற்றல் அல்லது திட்டமிடல் அல்லது உத்தி ஆகியவற்றின் முக்கியத்துவத்தை நான் மட்டுப்படுத்தவில்லை. உங்கள் இருதயங்களில் நான் பதியவைக்க முயற்சிப்பது இதுதான்—"தேவன் எதிர்பாராத விதமாக ஏதாவது செய்தால், நாம் அதைப் பின்பற்றி ஒத்துழைப்போம்!" தேவன் எப்போதும் நமது திட்டமிடல் மற்றும் நமது நல்ல உத்திகள் மூலமாக செயல்பட வேண்டும் என்று அவசியமில்லை! கல்விமான்களாக, நம் மூளையைப் பயன்படுத்துவதற்கு நாம் மிகவும் பழகிவிட்டோம், மேலும் தேவன் என்ன செய்கிறார் என்பதைப் புரிந்துகொண்டு, அவருடன் இணைந்து செல்ல முயற்சிப்பதில் நம்மில் பெரும்பாலோருக்கு போராட்டம் தொடங்குகிறது. தேவன் எதிர்பாராத விதத்தில் ஏதாவது செய்யப் போகிறார் என்றால், நாம் அதற்கு ஒத்துப்போக வேண்டும்!

# 2
# எழுப்புதல் காலத்தில் திருச்சபை

எருசலேம் திருச்சபை எழுப்புதலின் மூலமாக பிறந்தது. எனவே, எழுப்புதலின்போது ஒரு திருச்சபை எப்படி இருக்கும் என்பதைப் புரிந்துகொள்வதற்கு இது ஒரு சிறந்த முன் உதாரணமாக இருக்கும். நாம் உன்னதத்தின் ஆவியைப் பெற்று எழுப்புதலை அனுபவிக்கையில், எதை எதிர்பார்க்க வேண்டும் என்பதற்கான சில பாடங்களை நாம் கற்றுக்கொள்ளலாம். அப்போஸ்தலருடைய நடபடிகளில் முதல் எட்டு அத்தியாயங்கள் எருசலேம் திருச்சபையின் முதல் 12 ஆண்டுகளை படமிட்டுக் காட்டுகின்றன.

## கர்த்தர் அவர்கள் மத்தியில் வெளிப்படுத்தினதை அநுதினமும் தொடர்ந்து செய்தனர்

அப்போஸ்தலர் 2:42–47

42 அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்.

43 எல்லாருக்கும் பயமுண்டாயிற்று. அப்போஸ்தலர்களாலே அநேக அற்புதங்களும் அடையாளங்களும் செய்யப்பட்டது.

44 விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள்.

45 காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத்தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள்.

46 அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து, வீடுகள்தோறும் அப்பம்பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லலாத இருதயத்தோடும் போஜனம்பண்ணி,

47 தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவுபெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்.

தங்கள் நடுவில் கர்த்தர் வெளிப்படுத்தியதை விசுவாசிகள் அனுதினமும் தொடர்ந்து செய்ததை நாம் கவனிக்கிறோம்.

அப்போஸ்தலர் 2:42

**அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்.**

அப்போஸ்தலர் 2:46

**அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து, வீடுகள்தோறும் அப்பம்பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லலாத இருதயத்தோடும் போஜனம்பண்ணி,**

அப்போஸ்தலர் 5:42

**தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம்பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள்.**

எருசலேமுக்குப் போகும்படி ஒரு சிறிய பயணத்தை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்த இவர்கள், திடீரென்று அன்றாடம் நடந்துகொண்டிருந்த ஒரு காரியத்தில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டனர். இது நாம் வழக்கமாக ஞாயிறு ஆராதனைகளுக்குச் செல்வதைப் போன்றதாகவும், ஒருவேளை எப்போதாவது திருச்சபையில் நடக்கும் சிறப்புக் கூட்டங்களில் கலந்துகொள்வதைப் போன்றதாகவும், எல்லாவற்றையும் திட்டமிட்டு முடித்து அமைதியான வாழ்க்கையை நடத்துவது போன்றதாகவும் இருந்தது. ஆனால் ஒரு எழுப்புதலில், ஒவ்வொரு நாளும் ஏதோ ஒரு புதிய காரியம் நடக்கிறது! எருசலேம் திருச்சபையில், கர்த்தர் அவர்கள் மத்தியில் செய்துகொண்டிருந்த காரியங்கள் தொடர்ந்து நடந்துகொண்டே இருந்தன. அவர்கள் அநுதினமும் அவற்றை அனுபவித்துக்கொண்டிருந்தனர்—அது “ஏழு-நாட்களுக்கு-ஒருமுறை” நடக்கும் நிகழ்வாக இருக்கவில்லை!

## அட்டவணைகளை முறையாகப் பின்பற்ற முடியவில்லை

அவர்களது திட்டமிடப்பட்ட அட்டவணைகள் பின்பற்றமுடியாமல் போனதை நாம் கற்பனை செய்து பார்க்க முடியும். எழுப்புதலின்போது, நமது திட்டமிடப்பட்ட அட்டவணைகள் பாதிக்கப்படும்! அது கொஞ்சம் குழப்பங்களை ஏற்படுத்தலாம். எருசலேமில் இருந்த ஜனங்கள் தங்கள் பயணத்தை முன்கூட்டியே திட்டமிட்டிருக்கலாம்—அவர்கள் அந்த நாள் காலையில் பெந்தெகொஸ்தே பண்டிகைக்காக எருசலேமுக்குச் சென்று, மறுநாள் திரும்பி வரவும், அதற்கு அடுத்த நாள் வேலைக்குச் செல்லவும் திட்டமிட்டிருந்திருக்கலாம்!

இதைக் கவனியுங்கள்—அவர்கள் எருசலேமுக்கு வந்தார்கள், அங்கே தேவனுடைய வல்லமை அளவில்லாமல் பொழிந்தருளப்பட்டது! அவர்களின் வாழ்க்கை தொடப்பட்டது மற்றும் 3000 பேர் இரட்சிக்கப்பட்டனர்! அவர்களின் அட்டவணை பின்னர் கேள்விக்குறியானது! காலையிலும் மாலையிலும் தேவனைத் தேடவும் அவரைத் துதிக்கவும், ஏதோ ஒன்று தேவாலயத்திற்கு நேராக அவர்களை ஈர்த்தது. எழுப்புதல் வெளிப்படும்போது, அட்டவணைகள் மாறும். நாம் வேலைக்குச் செல்ல வேண்டாம் என்று நான் இங்கு பரிந்துரைக்கவில்லை. நான் சொல்வது என்னவென்றால், நமது அட்டவணையை மாற்றுகிற அல்லது மாற்றி அமைக்கிற விஷயங்கள் நடக்கும் என்றுதான் சொல்கிறேன். தேவன் நம் மத்தியில் அசைவாடுகிற காலத்தில் நாம் இருக்கிறோம் என்பதை அறிந்து நாம் எழுப்புதலுக்குள் வர வேண்டும். தேவன் வெளிப்படுத்த விரும்புவதை நாம் பின்தொடர்ந்து சென்று அதற்கு ஒத்துழைக்கும்படி, நமது அட்டவணையை மறுசீரமைக்க நாம் தயாராக இருக்க வேண்டும். எங்களுக்கு எழுப்புதல் வேண்டும், தேவனே. ஆவியைப் பொழிந்தருளுவீராக, கர்த்தாவே! எங்களை சந்தியும், தேவனே! என்று நம்மில் அநேகர் ஜெபித்துக்கொண்டிருக்கலாம். ஆனால் தேவன் “வெளிப்பட்டு” நமது அட்டவணையை மாற்றினால், “நாங்கள் எழுப்புதலை விரும்புகிறோம், ஆனால் எங்கள் அட்டவணையைத் தொடாமலும் எங்கள் வாழ்வில் குறுக்கிடாமலும் இருப்பீராக, ஆண்டவரே!” என்று நாம் சொல்லுவோமா அல்லது எழுப்புதலுக்கான நமது ஜெபங்களுக்கு தேவனுடைய பதிலைப் பெற நாம் உண்மையிலேயே ஆயத்தமாக இருப்போமா?

## ஒருமித்த சமுதாய உணர்வு—ஒருமித்து பகிர்ந்துகொள்ளுதல்

அப்போஸ்தலர் 2:44,45

**44 விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள்.**

**45 காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத்தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள்.**

எருசலேம் திருச்சபை இந்த பலமான வல்லமையை நோக்கி சென்றுகொண்டிருந்தபோது, எல்லாவற்றையும் ஒன்றாக வைத்துப் பகிர்ந்துகொள்ளும்—ஒருமித்த சமுதாய உணர்வை அதிகமாகப் பெற்றிருந்தனர் என்பதை நாம் காண்கிறோம். திடீரென்று, அவர்கள் ஒன்றாக சேர்த்து மதிய உணவுகள் மற்றும்

இரவு உணவுகளை உட்கொண்டனர், மேலும் தங்களுக்கு முன்பின் தெரியாத நபர்களுடன் அவர்கள் ஒன்றாகப் பயணம் செய்தார்கள். இந்த ஜனங்களிடையே ஒரு புதிய சமூக உணர்வு உணரப்பட்டது. அவர்கள் எல்லாவற்றையும் பொதுவாகக் கொண்டிருந்தார்கள் என்றும், விஷயங்களைப் பகிர்ந்துகொள்ள ஆரம்பித்தார்கள் என்றும் வேதாகமம் சொல்கிறது. எனவே, எழுப்புதல் என்ன செய்கிறது? அது உண்மையிலேயே நம் வாழ்வில் ஒரே இனமுள்ளவர்களாய் இருக்கிறோம் என்ற சமூக உணர்வை உருவாக்குகிறது. நமது வாழ்க்கைப் பயணங்களில் நாம் பகிர்ந்துகொள்ளத் தொடங்குகிறோம், மற்றும் மனமுவந்து கொடுப்பதிலும், உதவி செய்வதிலும், மற்றும் ஒற்றுமையாய் இருக்கவும் நாமாகவே முன்வந்து செயல்படுகிறோம்.

## திருச்சபையின் வேகமான வளர்ச்சி

எருசலேமில் இருந்த திருச்சபை வேகமான வளர்ச்சியை அடைந்ததைக்கூட நாம் காண்கிறோம். *“... இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்”* (அப்போஸ்தலர் 2:47ஆ). அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களின் சரியான எண்ணிக்கை நமக்குத் தெரியாது, 100 நபர்களாகவோ அல்லது 200 நபர்களாகவோ அல்லது வெறும் 10 நபர்களாகவோ இருந்திருக்கலாம், ஆனால் தினமும் ஜனங்கள் சேர்க்கப்பட்டார்கள் என்று வேதாகமம் பதிவு செய்கிறது. பேதுருவின் முதல் பிரசங்கத்திற்குப் பிறகு, ஒரே நாளில் 3000 பேர் சேர்க்கப்பட்டனர் (அப்போஸ்தலர் 2:41). பின்னாளில், முடவன் குணமடைந்த பிறகு மேலும் 5000 பேர் சேர்க்கப்பட்டனர் (அப்போஸ்தலர் 4:4). உண்மையிலேயே திருச்சபைக்கு இது அபரிவிதமான வளர்ச்சிதான்! நம் நகரத்தில் உள்ள திருச்சபைகளில் இதுபோன்ற ஆச்சரியமான விஷயங்கள் நடப்பதை நாம் விரும்பமாட்டோமா?

## திருச்சபையின் தொடர்ச்சியான வளர்ச்சிக்குக் காரணமாக விளங்கிய குறிப்பிடத்தக்க அற்புதங்கள்

குறிப்பிடத்தக்க அற்புதங்கள் திருச்சபையின் தொடர்ச்சியான வளர்ச்சியை ஏற்படுத்தியதை நாம் காண்கிறோம். அநேக அற்புதங்கள் இருந்தன, ஆனால் குறிப்பிடத்தக்க சில அற்புதங்கள் மட்டுமே அப்போஸ்தருடைய நடபடிகள் புத்தகத்தில் நமக்காகப்

பதிவு செய்யப்பட்டுள்ளன. 40 வருடங்களாக முடமாக இருந்த ஒரு மனுஷன் குணமடைந்தான் (அப்போஸ்தலர் 3:1-8). பேதுருவின் நிழல் மாத்திரம் தங்கள் மீது விழுந்தால் போதும் என்று சொல்லிக்கொண்டு, வெகு தூரத்திலிருந்து வந்த வியாதியஸ்தர்கள் குணமடைந்தார்கள்!

**அப்போஸ்தலர் 5:12-16**

**12 அப்போஸ்தலருடைய கைகளினாலே அநேக அடையாளங்களும் அற்புதங்களும் ஜனங்களுக்குள்ளே செய்யப்பட்டது. எல்லாரும் ஒருமனப்பட்டு சாலொமோனுடைய மண்டபத்தில் இருந்தார்கள்.**
**13 மற்றவர்களில் ஒருவரும் அவர்களுடனே சேரத் துணியவில்லை. ஆகிலும் ஜனங்கள் அவர்களை மேன்மைப்படுத்தினார்கள்.**
**14 திரளான புருஷர்களும் ஸ்திரீகளும் விசுவாசமுள்ளவர்களாகிக் கர்த்தரிடத்தில் அதிகமதிகமாய்ச் சேர்க்கப்பட்டார்கள்.**
**15 பிணியாளிகளைப் படுக்கைகளின் மேலும் கட்டில்களின்மேலும் கிடத்தி, நடந்துபோகையில் அவனுடைய நிழலாகிலும் அவர்களில் சிலர்மேல் படும்படிக்கு அவர்களை வெளியே வீதிகளில் கொண்டுவந்து வைத்தார்கள்.**
**16 சுற்றுப்பட்டணங்களிலுமிருந்து திரளான ஜனங்கள் பிணியாளிகளையும் அசுத்த ஆவிகளால் வாதிக்கப்பட்டவர்களையும் எருசலேமுக்குக் கொண்டுவந்தார்கள்; அவர்களெல்லாரும் குணமாக்கப்பட்டார்கள்.**

எனவே, எழுப்புதலின்போது, இதுதான் நம் மத்தியிலும் நடக்கும். காணத்தக்க விதத்தில் அற்புதங்கள் நடக்கும். நம் வாழ்வில் தினசரி நடக்கும் அற்புதங்களுக்காக நாம் தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம், ஆனால் எழுப்புதலின்போது நம் மத்தியில் குறிப்பிடத்தக்க பெரிய அற்புதங்கள் நடக்கத் தொடங்கும்.

## உபத்திரவப்படுத்தப்படுதல்

எழுப்புதலில் உள்ள ஒரு திருச்சபை உபத்திரவத்தைச் சந்திக்கிறது. நாம் அருள்மாரி பொழிந்தருளப்படுதலின் மத்தியில் இருக்கும்போது, சில காரணங்களால், சபை உபத்திரவத்தை எதிர்கொள்ளும். அப்படியானால், நாம் உண்மையிலேயே ஒரு அருள்மாரி பொழிந்தருளப்படுதலை விரும்புகிறோமா? பேதுருவும் யோவானும் சனகெரிப் சங்கத்தால் அழைத்துச் செல்லப்பட்டனர், மற்றும் இயேசுவின் நாமத்தைக் குறித்துப் பிரசங்கிக்கவே கூடாது என்று அவர்களுக்குக் கட்டளையிடப்பட்டது (அப்போஸ்தலர் 4:17,18). அப்போஸ்தலர்கள் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டனர் (அப்போஸ்தலர் 5:17,18). ஸ்தேவான் கல்லெறிந்து கொல்லப்பட்டான் (அப்போஸ்தலர் 7:58). ஒரு அருள்மாரி பொழிந்தருளப்படுதலின் நடுவில் உபத்திரவம்

அதிகரிப்பது சாதாரணமானதுதான். ஆனால் அப்போஸ்தலர்கள் எப்படிப் பதிலளித்தார்கள் என்பதைக் கவனியுங்கள்.

**அப்போஸ்தலர் 4:19,20**
[19] **பேதுருவும் யோவானும் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: தேவனுக்குச் செவிகொடுக்கிறதைப்பார்க்கிலும் உங்களுக்குச் செவிகொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமோ நீங்களே நிதானித்துப்பாருங்கள்.**
[20] **நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாமலிருக்கக்கூடாதே என்றார்கள்.**

**அப்போஸ்தலர் 5:41**
**அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால், சந்தோஷமாய் ஆலோசனை சங்கத்தைவிட்டுப் புறப்பட்டுப்போய்,**

பரலோகத்தை மூடிவிடவோ அல்லது அருள்மாரி பொழிந்தருளப்படுவதை "குறைக்க" வேண்டும் என்றோ தேவனிடத்தில் வேண்டிக்கொள்வோம் என்று அப்போஸ்தலர்கள் கூறவில்லை. மாறாக, தேவன் என்ன செய்துகொண்டிருந்தாரோ அதனுடன் இணைந்து செயல்படுவதில் அவர்கள் மகிழ்ச்சியடைந்தனர். அவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படிவதில் மகிழ்ச்சியடைந்து, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திற்காகப் பாடுபடுவதைக் கனமாக எண்ணினார்கள். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் துன்பப்படுவதை நாமும் கனத்திற்குரிய ஒரு விஷயமாக எண்ண வேண்டும்!

நம்மில் பெரும்பாலானோர் மிகவும் சௌகரியமான கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ்ந்திருக்கிறோம். நாம் எந்த உபத்திரவத்தையும் சந்தித்ததில்லை. நம்முடைய விசுவாசத்தைப் பற்றி அறிந்த பிறகு, ஒருவேளை நமது சக ஊழியர் நம்முடன் பேசாமலும், மதிய உணவுக்கு நம்முடன் வெளியே வராமலும், வழக்கமாக அவர் காபி கொண்டுவருவதைப்போல கொண்டுவராமலும் இருந்திருப்பார், அந்த "சிறிய விஷயத்தை" நாம் அனுபவித்திருக்கலாம். மேலும் நமது விசுவாசத்திற்காக நமது பணியிடத்தில் நாம் துன்புறுத்தலுக்கு ஆளாகிறோம் என்று நாம் நினைக்கிறோம். உண்மையில் சொல்லப்போனால், "உபத்திரவம்" என்று அழைக்கப்படும் எதையும் நாம் இன்னும் பார்த்திருக்கவில்லை. ஆனால், "தேவனே, எங்களுக்கு எழுப்புதல் வேண்டும்" என்று நாம் சொல்வோமானால், எருசலேம் திருச்சபை அனுபவித்ததைப்போல, அதிக உபத்திரவத்தைச் சந்திக்க நாம் ஆயத்தமாக இருக்க வேண்டும்.

## பாவத்திற்கான கடுமையான நியாயத்தீர்ப்பு

எழுப்புதல் ஏற்படும் கால சூழ்நிலையில், தேவ ஜனங்கள் மத்தியில் ஏராளமான கிருபை, அற்புதங்கள் மற்றும் வரங்கள் வெளிப்படுகின்றன என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஆனால் அதே நேரத்தில், பாவத்திற்கு எதிராக உடனடி நியாயத்தீர்ப்பு நடக்கிறது. நம்மில் எத்தனை பேர் பொய் சொல்லும்போது மரித்துப் போகிறோம்? அப்படி நடந்தால், இங்கே ஒருவர் கூட ஜீவனோடு இருக்க மாட்டார்கள். இன்று, நாம் அனைவரும் விசுவாசிகளாக இருந்தாலும்கூட, நம்மில் சிலர் இன்னும் பொய் சொல்கிறோம், திருடுகிறோம், ஆனாலும் கூட, யாரும் மரித்துப்போவதில்லை! ஆனால் எருசலேமில் எழுப்புதலுக்கு மத்தியில், அனனியாவும் சப்பீராளும் பொய் சொல்லி, திருச்சபைக்கான தங்களது பங்களிப்பில் ஒரு சிறிய மாற்றத்தைச் செய்தார்கள், அவர்கள் மரித்துப்போனார்கள் (அப்போஸ்தலர் 5:1–10). அது கடுமையான நியாயத்தீர்ப்பு!

## இயற்கைக்கு அப்பாற்பட்ட நிகழ்வுகள் மற்றும் தேவதூதர்களின் சந்திப்புகள்

ஆரம்பகால திருச்சபை குணப்படுத்துதல்கள் மற்றும் அற்புதங்களோடு கூட இயற்கைக்கு அப்பாற்பட்ட நிகழ்வுகளையும் தேவதூதர்களின் சந்திப்புகளையும் அனுபவித்தது. அப்போஸ்தலர் 4:31, *“... அவர்கள் ஜெபம்பண்ணினபோது அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது”* என்ற நிகழ்வைப் பதிவு செய்கிறது. லேசான அதிர்வியக்கம் மட்டுமல்ல, அவர்கள் கூடியிருந்த இடம் முழுவதும் அதிர்ந்தது. ஒரு ஜெபக் கூட்டத்தில் இருக்கும்போது, கட்டிடம் குலுங்கியதை நீங்கள் உணர்கிறீர்கள், ஆனால் எதுவும் விழவில்லை என்பதைக் கற்பனை செய்து பாருங்கள். அப்போஸ்தலருடைய நடபடிகள் 5:19–21ல், தேவதூதன் வந்து அப்போஸ்தலர்களை சிறைச்சாலையிலிருந்து வெளியே கொண்டுவந்தான் என்று சொல்லப்பட்டுள்ளது. அப்போஸ்தலர் 8:26–ல் ஒரு தேவதூதன் பிலிப்புக்கு வனாந்தரமான இடத்திற்குச் செல்லும்படி அறிவுறுத்தினான் என்று சொல்லப்பட்டுள்ளது. எனவே, தேவதூதர்களின் செயல்பாடுகளும் தேவதூதர்களின் ஊழியமும் அருள்மாரி பொழிந்தருளப்படும்போது அதிகரிக்கும்.

## உள் பிரச்சனைகள் இல்லாமல் இல்லை

அருள்மாரி பொழிந்தருளப்படும்போது அல்லது சந்திப்பின்போது, திருச்சபையில் சில உள் பிரச்சனைகள் இருக்க வாய்ப்பிருக்கிறது. சில சமயங்களில், தேவனுடைய பலமான சந்திப்பு இருப்பதால், எந்தப் பிரச்சனையும் இருக்காது என்ற தவறான எண்ணம் நமக்கு இருக்கும். அந்தக் கருத்துக்கு மாறாக, எருசலேமில் இருந்த திருச்சபை பிரச்சனைகளை சந்தித்தது. முதல் பிரச்சனையாக, விதவைகளுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டபோது, அதை அவர்கள் சமாளிக்க வேண்டியதாய் இருந்தது. சிலர் கிரேக்க மொழி பேசும் விதவைகளாய் இருந்தனர் மற்றும் சிலர் எபிரேய மொழி பேசும் விதவைகளாய் இருந்தனர். உணவு விநியோகிக்கப்பட்டதில் தாங்கள் நியாயமாக நடத்தப்படவில்லை என்று சிலர் கருதினர் (அப்போஸ்தலர் 6). அதனால் ஒரு வாக்குவாதம் ஏற்பட்டது, ஆனால் அப்போஸ்தலர்கள் தேவனுடைய ஞானத்துடன் எழுந்து பிரச்சனையைத் தீர்த்தனர்.

எழுப்புதலின்போது, உள் பிரச்சனைகள் இருக்கலாம், நாம் அவற்றை தேவனுடைய ஞானத்தைக்கொண்டு தீர்க்க வேண்டும், பயப்படக் கூடாது என்பதை நாம் இங்கு பார்க்கிறோம். இன்னொரு குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால், தேவனுடைய வார்த்தையின் ஊழியம் மற்றும் ஜெபம்–போன்ற முக்கியமானவற்றிற்குத் தங்களைத் தொடர்ந்து ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று தலைவர்கள் முடிவு செய்தனர். எழுப்புதலுக்கு தலைமைத்துவத்தை வழங்குவதுதான் முக்கியம் என்று எண்ணி, தலைவர்கள் அதில் மட்டுமே கவனம் செலுத்தினர். நாம் தேவனைப் பின்தொடரும்போது இது நமக்கு ஒரு முக்கியமான பாடமாக இருக்கிறது.

நாம் தலைவர்களை அளவுக்கு அதிகமாக உயர்த்தி வைக்காமல் இருப்பதில் கவனமாக இருக்க வேண்டும். எழுப்புதல் ஒரு மனுஷனையோ அல்லது ஒரு ஊழியத்தையோ மையமாகக் கொண்டிருக்கக்கூடாது. ஆனாலும், எழுப்புதலுக்கு தலைமைத்துவம் முக்கியம் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்–தலைவர்கள் தங்கள் பதவியை சரியாகப் பயன்படுத்தி பொறுப்பை நிறைவேற்ற வேண்டும் மற்றும் தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்பதில் அவர்கள் கவனம் செலுத்த வேண்டும். இது அருள்மாரி பொழிந்தருளப்படுவதை நீட்டிக்கச் செய்யவும்,

அதிகரிக்கச் செய்யவும், குறையாமல் பாதுகாக்கவும் உதவும். வேல்ஷ் எழுப்புதலைப் பற்றி ஒரு சோகமான விஷயம் உள்ளது. இவான் ராபர்ட்ஸ் என்பவர் எழுப்புதலின் முக்கிய தலைவர்களில் ஒருவராக இருந்தார், உண்மையில், எழுப்புதலின் உச்சத்தில், அவர் அதிக முக்கியத்துவம் வாய்ந்த நபராக இருந்தார். ஆனால் துரதிர்ஷ்டவசமான ஒரு காரியம் நடந்தது. அந்தத் தலைமைப் பதவியிலிருந்து அவர் திடீரென விலக்கப்பட்டார். இவான் ராபர்ட்ஸ் மனதளவிலும் சரீரப்பிரகாரமாகவும் பெலவீனப்பட்டார்—மனமடிவாகி சோர்ந்து போனார். ஏறக்குறைய ஒரே இரவில், அவர் அந்தத் தலைமைப் பதவியிலிருந்து வெளியேறி, தனது வாழ்நாள் முழுவதையும் பெரும்பாலும் தனிமையில்—எழுதுதலிலும் ஜெபத்திலும் கழித்தார். வேல்ஷ் எழுப்புதலில் தேவன் வல்லமையாய் பயன்படுத்திய ஒரு மனுஷனுக்கு அது மிகவும் பரிதாபமான முடிவாக இருந்தது!

எழுப்புதலில் தலைமைத்துவம் மிகவும் முக்கியமானதாகும். தலைமைத்துவத்தை உயர்த்தி, தலைமைத்துவத்தை பெரிதாக்க நாம் விரும்பவில்லை என்றாலும், எழுப்புதலுக்கான தலைமைப் பொறுப்பில் இருப்பவர்கள் என்ற வகையில், கவனம் செலுத்துவதும், சோர்ந்து போகாமல் நம்மைக் காத்துக்கொள்வதும் அவசியம். அதே நேரத்தில் அவர் நம் மத்தியில் பூமியில் வெளிப்படுத்திக் கொண்டிருப்பவைகளுக்காக நாம் தேவனிடத்தில் கணக்கு ஒப்புவிக்க வேண்டியதால், பொறுப்பில் கவனமாக இருப்பதும் மிகவும் முக்கியம் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

## ஒவ்வொருவரும் அற்புதத்தில் மூழ்கியிருந்தனர்

அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில், அருள்மாரி பொழிந்தருளப்படுதல் வேகமாக பெருகினபோது, ஒவ்வொருவரும் அற்புதங்களினால் நிரம்பி வழிய ஆரம்பித்ததை நாம் பின்னர் பார்க்கிறோம். விரைவில், வல்லமையான அடையாளங்களையும் அற்புதங்களையும் வெளிப்படுத்தின ஸ்தேவான் (அப்போஸ்தலர் 6) மற்றும் பிலிப்பு (அப்போஸ்தலர் 8) போன்றவர்கள் பற்றி நாம் கேள்விப்படத் தொடங்குகிறோம். திருச்சபையில் உள்ள ஒவ்வொரு நபரும் வியாதியஸ்தர்களைக் குணப்படுத்துவதையும், பிசாசுகளைத் துரத்துவதையும், இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் மரித்தவர்களை எழுப்புவதையும் தேவன் பார்க்க விரும்புகிறார் என்று நான் உறுதியாக நம்புகிறேன். இந்த

நகரத்தில் உள்ள தேவனுடைய ஜனங்கள் தம்முடைய மகிமையை வெளிப்படுத்தும்படிக்கு நம் நகரத்தின் தெருக்களில் சென்று அதை அவருக்குச் சொந்தமாக்குவதை அவர் பார்க்க விரும்புகிறார். தெருக்களில் தேவையோடு உள்ள ஜனங்கள் மத்தியில் ஒவ்வொரு விசுவாசியும் வல்லமையான அடையாளங்களையும் அற்புதங்களையும் வெளிப்படுத்துவார்கள். அந்த நிலைக்குத்தான் திருச்சபையைக் கொண்டுவர வேண்டும் என்று தேவன் விரும்புகிறார், மற்றும் அதுதான் தேவனுடைய அருள்மாரி பொழிந்தருளப்படும்போது நடக்கும். நீங்களும் நானும்தான் தேவனுடைய மகிமையை தெருக்களிலும், சந்தைவெளிகளிலும் மற்றும் ஜனங்கள் இருக்கும் எல்லா இடங்களிலேயும் சுமந்து செல்பவர்களாய் இருப்போம்!

## அக்கினி மறுபடியும் பரவுகிறது

எழுப்புதல் அக்கினி பரவிக்கொண்டிருக்கிறது! எருசலேமில் சவுலின் தலைமையில் நடந்த உபத்திரவத்தின் காரணமாக, விசுவாசிகள் சிதறிப்போனார்கள், ஆனால் அவர்கள் எங்கு சென்றாலும் எழுப்புதலின் அக்கினியை எடுத்துச் சென்றனர். அவர்கள் சமாரியாவுக்கும் யூதேயாவுக்கும் சென்றார்கள், அந்த இடங்களில் அக்கினி பற்றிக்கொண்டன (அப்போஸ்தலர் 8). சிலர் அந்தியோகியாவுக்குச் சென்றனர், அந்தியோகியா பட்டணத்திலும் அக்கினி பற்றிக்கொண்டது (அப்போஸ்தலர் 11). சாதாரண விசுவாசிகள் தாங்கள் சென்ற இடமெல்லாம் எழுப்புதலின் அக்கினியை எடுத்துச் சென்றனர். நாம் ஒவ்வொருவரும் கூட “எழுப்புதலை சுமந்து செல்பவர்களாக”–தேவனுடைய அருள்மாரி பொழிந்தருளப்படுதலின் மத்தியில் எழுப்புதலின் அக்கினியை சுமந்து செல்பவர்களாக மாறுவோம் என்று நான் நம்புகிறேன்.

எழுப்புதலின் மத்தியிலிருந்து ஒருவேளை உபத்திரவம் நம்மை வெளியேற்றலாம் அல்லது வெளியேற்றாமலும் இருக்கலாம். ஒருவேளை, ஒரு புதிய வேலைக்காக நாம் மாற்றப்படலாம், நமது வேலைகளில் இடமாற்றம் ஏற்படலாம், மற்றும் பல காரியங்கள் நடக்கலாம். பெங்களூர் நகரத்திலிருந்து நாம் வெளியேறுவதற்கான பல காரணங்கள் இருக்கலாம். ஆனால் நாம் போகும்போது, தேவனுடைய அருள்மாரி மழையை சுமந்து செல்வோம்! நாம் தேவனுடைய அக்கினிகளை சுமந்துகொண்டு வெளியே சென்று, உலகத்தின் மற்ற பகுதிகளையும் அந்த அக்கினியைக்கொண்டு பற்றவைப்போம்! அதுதான் எழுப்புதலைப் பெற்ற ஒரு திருச்சபை!

எழுப்புதலைப் பெற்ற ஒரு திருச்சபையாக இருக்க வேண்டுமானால், தேவனுடைய கிரியைக்கு மத்தியில், அது நம் அன்றாட வாழ்க்கையை நிச்சயம் பாதிக்கும்; நமக்குத் அறிந்தபடி, அது நம் திருச்சபை வாழ்க்கையையும் பாதிக்கும். ஆனால் அவை எல்லாவற்றிற்கும் மதிப்பு உண்டு, ஏனென்றால், நம் நகரம் மாறப்போகிறது என்றால், உண்மையிலேயே தேவனுடைய சந்திப்பு அதற்கு அவசியம் தேவைப்படுகிறது. நமது நகரம் அசைக்கப்பட வேண்டுமானால், இன்று நம் மத்தியில் தேவன் கிரியை செய்வதைவிட, அதிகமாக கிரியை செய்ய வேண்டும் என்பதுதான் அதன் அர்த்தம். நமது நகரத்தில் ஏற்கனவே நடந்த எல்லாவற்றிற்காகவும் நாம் நன்றியுள்ளவர்களாக இருந்தாலும்கூட, நம் நகரத்தில் இன்னும் இயேசு கிறிஸ்துவை அறியாதவர்களின் எண்ணிக்கையைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். கிறிஸ்துவை அறியாத ஜனங்கள் இன்னும் கோடிக்கணக்கில் உள்ளனர். நாம் நமது நகரத்தை அசைக்கப்போகிறோம் என்றால், நாம் தேவனுடைய வல்லமையான அருள்மாரியைக் கொண்டிருக்க வேண்டும். நாம் தேவனுடைய சந்திப்பைப் பெற்றிருக்க வேண்டும். இன்று நாம் தேவனோடு நடப்பதைவிட அதிகமாக அவரோடு நடக்க வேண்டும். இதன் அர்த்தம் என்னவென்றால், நீங்களும் நானும், இன்னும் அதை நோக்கி முன்னேறிச் செல்ல வேண்டும். ஒரு வல்லமையான எழுப்புதலுக்காகவும், அவருடைய ஆவி அளவில்லாமல் பொழிந்தருளப்படும்படியாகவும் தேவனிடத்தில் கேட்க நாம் ஆயத்தமாக இருக்கிறோமா?

எழுப்புதலில் உள்ள ஒரு திருச்சபையாக நாம் முன்னேறிச் செல்வோமாக!

# உன்னை நேசிக்கும் தேவன் யார் என்று உனக்குத் தெரியுமா?

சுமார் 2000 வருஷங்களுக்கு முன்பு, தேவன் மனுஷனாக இந்த உலகத்திற்கு வந்தார். அவருடைய நாமம் இயேசு என்பதாகும். அவர் முற்றிலும் பாவமில்லாத வாழ்க்கையை வாழ்ந்தார். இயேசு மாம்சத்தில் வந்த தேவனாக இருந்ததால், அவர் சொன்னவைகள் மற்றும் செய்தவைகள் அனைத்துமே தேவனை நமக்கு வெளிப்படுத்தின. அவர் பேசின வார்த்தைகள் யாவும் தேவனுடைய வார்த்தைகளாக இருந்தன. அவர் செய்த காரியங்கள் யாவும் தேவனுடைய செயல்களாக இருந்தன. இயேசு இந்தப் பூமியில் அநேக அற்புதங்களைச் செய்தார். அவர் வியாதியஸ்தர்களையும் வேதனையில் இருந்தவர்களையும் குணப்படுத்தினார். அவர் குருடர்களின் கண்களைத் திறந்தார், செவிடனின் செவிகளைத் திறந்தார், முடவர்களை நடக்கச் செய்தார், மற்றும் சகலவிதமான நோய்களையும் வியாதிகளையும் சுகமாக்கினார். அவர் ஒரு சில அப்பத் துண்டுகளை அற்புதமாகப் பெருகச் செய்ததன் மூலமாக பசியோடிருந்தவர்களை போஷித்தார், கடும்புயலை அடக்கினார், மற்றும் இன்னும் அநேக அற்புதங்களையும் கூட செய்தார்.

**ஜனங்கள் நலமாகவும், சுகமாகவும், ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்க வேண்டும் என்று அவர் விரும்புவதால், அவர் ஒரு நல்ல தேவன் என்பதை இந்தச் செயல்கள் அனைத்தும் நமக்கு வெளிப்படுத்துகின்றன. தேவன் ஜனங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய விரும்புகிறார்.**

அப்படியானால் தேவன் ஏன் மனுஷனாக மாறி நமது உலகத்திற்குள் வரும்படி தீர்மானிக்க வேண்டும்? இயேசு ஏன் வந்தார்?

நாம் எல்லோருமே பாவம் செய்து, நம்மை சிருஷ்டித்த தேவனுக்கு முன்பாக ஏற்றுக்கொள்ளத் தகாத செயல்களைச் செய்துவிட்டோம். பாவத்திற்கான விளைவுகள் நிச்சயம் உண்டு. பாவமானது தேவனுக்கும் நமக்கும் இடையே தாண்டிச் செல்ல முடியாத ஒரு மிகப் பெரிய சுவரைப் போன்றதாக இருக்கிறது. பாவம் நம்மை தேவனிடமிருந்து பிரிக்கிறது. நம்மை சிருஷ்டித்தவரை அறிந்துகொள்வதிலிருந்தும், ஒரு அர்த்தமுள்ள உறவை அவருடன் ஏற்படுத்திக்கொள்வதிலிருந்தும் அது நம்மைத்

தடுக்கிறது. எனவே, நம்மில் பலர் இந்தக் காலியிடத்தை மற்ற விஷயங்களால் நிரப்ப முயற்சிக்கிறோம்.

நம்முடைய பாவங்களின் மற்றொரு விளைவு, தேவனிடமிருந்து விலகிச் செல்லும் நித்திய பிரிவினையாகும். தேவனுடைய நியாயஸ்தலத்தில், பாவத்திற்கான தண்டனை மரணமாகும். மரணம் என்பது தேவனிடமிருந்து பிரிந்து நரகத்தில் வாழும் நித்திய பிரிவினையாகும்.

ஆனால் நற்செய்தி என்னவென்றால், நம்மால் பாவத்திலிருந்து விடுபட்டு தேவனிடத்திற்குத் திரும்பிவர முடியும் என்பதேயாகும். வேதாகமம் கூறுகிறது, ***"பாவத்தின் சம்பளம் (கூலி) மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்"*** **(ரோமர் 6:23).** இயேசு சிலுவையில் மரித்தபோது, முழு உலகத்தின் பாவங்களுக்கான விலைக்கிரயத்தையும் செலுத்தினார். மூன்று நாட்களுக்குப் பிறகு, அவர் மறுபடியும் உயிரோடு எழும்பி, பலருக்குத் தம்மை உயிரோடு இருக்கிறவராகக் காட்டினார், பின்பு, மறுபடியும் பரலோகத்திற்குத் திரும்பிச் சென்றார்.

தேவன் அன்பும் இரக்கமும் கொண்ட தேவனாக இருக்கிறார். ஒரு நபர் கூட நரகத்தில் அழிந்துபோவதை அவர் விரும்புவதில்லை. ஆகவேதான், பாவத்திலிருந்தும் அதன் நிரந்தர விளைவுகளிலிருந்தும் விடுபடுவதற்கான ஒரு வழியை முழு மனித இனத்திற்கும் அருளுவதற்காக அவர் இறங்கி வந்தார். அவர் பாவிகளை இரட்சிக்க வந்தார்–உங்களைப் போன்றவர்களையும் என்னைப் போன்றவர்களையும் பாவத்திலிருந்தும் நித்திய மரணத்திலிருந்தும் மீட்கவே வந்தார்.

இலவசமாகக் கிடைக்கும் இந்த பாவ மன்னிப்பைப் பெற்றுக்கொள்ள, நாம் ஒரே ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும் என்று வேதாகமம் நமக்குச் சொல்கிறது–அது என்னவென்றால், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் செய்து முடித்ததை ஏற்றுக்கொண்டு, அவரை முழு இருதயத்தோடு விசுவாசிக்க வேண்டும் என்பதேயாகும்.

***"... அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவான்"*** **(அப்போஸ்தலர் 10:43).**

***"கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்"*** **(ரோமர் 10:9).**

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தால், நீங்களும் கூட பாவமன்னிப்பைப் பெற்று சுத்திகரிக்கப்படலாம்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையும், அவர் உங்களுக்காக சிலுவையில் என்ன செய்திருக்கிறார் என்பதையும் விசுவாசிப்பதற்கு உங்களுக்கு உதவும் ஒரு எளிய ஜெபம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இயேசு உங்களுக்காகச் செய்ததை நீங்கள் ஏற்றுக்கொண்டீர்கள் என்பதை வெளிப்படுத்தவும், உங்கள் பாவங்களுக்கான பாவமன்னிப்பைப் பெற்றுக்கொண்டு சுத்திகரிக்கப்படவும் இந்த ஜெபம் உங்களுக்கு உதவும். இந்த ஜெபம் உங்களுக்கான ஒரு வழிகாட்டி மட்டுமே. நீங்கள் உங்கள் சொந்த வார்த்தைகளைப் பயன்படுத்தியும் கூட ஜெபிக்கலாம்.

*அன்புள்ள கர்த்தராகிய இயேசுவே, சிலுவையில் நீர் எனக்காக என்ன செய்திருக்கிறீர் என்பதை இன்று நான் புரிந்துகொண்டேன். நீர் எனக்காக மரித்தீர், உம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தை சிந்தினீர், நான் மன்னிக்கப்படும்படி என் பாவங்களுக்கான தண்டனையை நீர் ஏற்றுக்கொண்டீர். உம்மை விசுவாசிக்கிறவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்கிறார்கள் என்று வேதாகமம் சொல்கிறது.*

*இன்று, நான் உம்மை விசுவாசிக்கவும், எனக்காக சிலுவையில் மரித்து, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததன் மூலம் நீர் எனக்காகச் செய்ததை ஏற்றுக்கொள்ளவும் நான் தீர்மானிக்கிறேன். எனது சொந்த நற்கிரியைகளால் நான் என்னை இரட்சித்துக்கொள்ள முடியாது என்பதை அறிவேன், வேறு எந்த மனுஷனும் என்னை இரட்சிக்க முடியாது என்பதும் எனக்குத் தெரியும். என் பாவங்களுக்கான மன்னிப்பை என்னால் சம்பாதிக்க முடியாது.*

*இன்று, நீர் எனக்காக மரித்தீர், என் பாவங்களுக்கான விலைக்கிரயத்தை செலுத்தினீர், மரித்தோரிலிருந்து மறுபடியும் உயிர்த்தெழுந்தீர் என்றும், உம் மீது வைத்திருக்கிற விசுவாசத்தால், என் பாவங்களுக்கான மன்னிப்பையும் சுத்திகரிப்பையும் நான் பெற்றுக்கொள்கிறேன் என்றும் நான் என் உள்ளத்தில் விசுவாசித்து என் வாயினால் அறிக்கையிடுகிறேன்.*

*இயேசுவே உமக்கு நன்றி. உம்மை நேசிக்கவும், உம்மை அதிகமாக அறிந்துகொள்ளவும், உமக்கு உண்மையாக இருக்கவும் எனக்கு உதவி செய்வீராக. ஆமென்.*

# ஆல் பீப்பிள் சர்ச் பற்றி அறிவோம்

ஆல் பீப்பிள் சர்ச்சானது பெங்களூர் நகரத்துக்கு உப்பாகவும் வெளிச்சமாகவும் இருக்க வேண்டும் என்பதும், இந்த தேசத்துக்கும் இன்னும் நிறைய தேசங்களுக்கும் தேவ சத்தமாக இருக்க வேண்டும் என்பதும்தான் எங்களது தரிசனம்.

ஆல் பீப்பிள் சர்ச்சானது **இயேசுவை நேசிக்கும், வார்த்தையில் கவனம் செலுத்தும், ஆவியால் நிரப்பப்பட்டிருக்கும்** ஒரு திருச்சபையும், ஒரு குடும்ப திருச்சபையும், மேம்படுத்தும் மையமும், ஊழியத்தை அடிப்படையாகக் கொண்டதும் மற்றும் உலகளாவிய ஊழியத்தை செய்யும் ஒரு திருச்சபையுமாகும்.

- ஒரு **குடும்பத் திருச்சபையாக,** கிறிஸ்துவை மையமாகக் கொண்ட ஐக்கியத்தில் ஒரு சமூகமாக ஒன்றாக வளர்கிறோம், தேவனுடைய சபையாக ஒருவருக்கொருவர் அன்பாக இருந்து அக்கறையோடு ஊழியம் செய்கிறோம்.
- **மேம்படுத்தும் ஒருமையமாக,** ஒவ்வொரு விசுவாசியும் வெற்றியுடன் வாழவும், கிறிஸ்துவின் சாயலில் முதிர்ச்சியடையவும், அவர்களின் வாழ்க்கைக்கான தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்றவும் நாங்கள் ஊக்கமளித்து, அவர்களை மேம்படுத்துகிறோம்.
- **ஊழியத்தை அடிப்படையாகக் கொண்டவர்களாக,** தேவனுடைய வார்த்தையினாலும் பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையுள்ள செயல்களினாலும், இயேசு கிறிஸ்துவின் முழு சுவிசேஷத்தினால் நமது நகரம், தேசம் மற்றும் பிற தேசங்களை ஆசீர்வதிக்க அர்த்தமுள்ள ஊழியத்தில் ஈடுபடுகிறோம்.
- **ஒரு உலகளாவிய ஊழியமாக,** தேவனுடைய ராஜ்யத்திற்காகத் தங்கள் பிராந்தியங்களில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய தெய்வீகத் தலைவர்கள் மற்றும் ஆவியானவரால் வழிநடத்தப்படும் திருச்சபைகளை வளர்ப்பதன் மூலம் உள்நாட்டிலும் உலக அளவிலும் நாங்கள் ஊழியம் செய்கிறோம்.

ஆல் பீப்பிள் சர்ச்சில், பரிசுத்த ஆவியின் அபிஷேகம் மற்றும் நடத்துதலில் தேவனுடைய வார்த்தையை முழுமையாகவும், சமரசம் செய்யாமலும் முன்வைக்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.

நல்ல இசை, ஆக்கப்பூர்வமான விளக்கக்காட்சிகள், தேர்ந்த வேத தர்க்கவியலாலர்கள், இன்றைய காலத்து ஏற்ற ஊழிய முறைகள், நவீன தொழில்நுட்பம் போன்றவைகள், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையில் தேவனுடைய வார்த்தையை பிரசங்கிக்கும் முறைக்கும் பரிசுத்த ஆவியானவரின் அடையாளங்கள், அதிசயங்கள், அற்புதங்கள் மற்றும் வரங்களுக்கும் ஒருபோதும் ஈடாகாது என்று நாங்கள் நம்புகிறோம் (1 கொரிந்தியர் 2:4,5; எபிரேயர் 2:3,4). எங்கள் கருப்பொருள் இயேசு, எங்கள் உள்ளடக்கம் வார்த்தை, எங்கள் முறை பரிசுத்த ஆவியானவரின் வல்லமை, எங்கள் தாகம் மக்கள் மற்றும் எங்கள் குறிக்கோள் கிறிஸ்துவைப் போல முதிர்ச்சியடைதலாகும்.

பெங்களூரை மையமாகக் கொண்டு செயல்படும் எங்களது ஆல் பீப்பிள் சர்ச்சானது, இந்தியாவில் பல இடங்களில் திருச்சபையைக் கொண்டுள்ளது. ஆல் பீப்பிள் சர்ச் இருப்பிடங்களின் தற்போதைய பட்டியலையும் தொடர்புக்கான தகவலையும் பெற, apcwo.org/locations ல் உள்ள எங்கள் வலைத்தளத்தைப் பார்வையிடவும் அல்லது contact@apcwo.org க்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

## இலவச வெளியீடுகள்

A Church in Revival
A Real Place Called Heaven
A Time for Every Purpose
Ancient Landmarks
Baptism in the Holy Spirit
Being Spiritually Minded and Earthly Wise
Biblical Attitude Towards Work
Breaking Personal and Generational Bondages
Change
Code of Honor
Divine Favor
Divine Order in the Citywide Church
Don't Compromise Your Calling
Don't Lose Hope
Equipping the Saints
Foundations (Track 1)
Fulfilling God's Purpose for Your Life
Gifts of the Holy Spirit
Giving Birth to the Purposes of God
God Is a Good God
God's Word—The Miracle Seed
How to Help Your Pastor
Integrity
Kingdom Builders
Laying the Axe to the Root
Living Life Without Strife
Marriage and Family
Ministering Healing and Deliverance
Offenses–Don't Take Them
Open Heavens
Our Redemption
Receiving God's Guidance
Revivals, Visitations and Moves of God
Shhh! No Gossip!
Speak Your Faith
The Conquest of the Mind
The Father's Love
The House of God
The Kingdom of God
The Mighty Name of Jesus
The Night Seasons of Life
The Power of Commitment
The Presence of God
The Redemptive Heart of God
The Refiner's Fire
The Spirit of Wisdom, Revelation and Power
The Wonderful Benefits of Speaking in Tongues
Timeless Principles for the Workplace
Understanding the Prophetic
Water Baptism
We Are Different
Who We Are in Christ
Women in the Workplace
Work Its Original Design

புதிய புத்தகங்கள் தொடர்ந்து வெளியிடப்படுகின்றன. PDF, ஆடியோ மற்றும் பிற வடிவங்களில் இலவசமாக ஆல் பீப்பிள் சர்ச்சின் கிறிஸ்தவ புத்தகங்களைப் பதிவிறக்கம் செய்ய apcwo.org/books என்ற வலைதளத்தைப் பார்வையிடவும். இவற்றில் பல புத்தகங்கள் பிற மொழிகளிலும் கிடைக்கின்றன. இலவச ஆடியோ மற்றும் வீடியோ பிரசங்கங்கள், பிரசங்க குறிப்புகள் மற்றும் பல இலவச ஆதாரங்களுக்கு apcwo.org/sermons என்ற வலைதளத்தைப் பார்வையிடவும்.

# கிறிசாலிஸ் கவுன்சிலிங்

வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள்ளவும், அவற்றைக் கடக்கவும் மக்களுக்கு உதவ, கிறிசாலிஸ் கவுன்சிலிங்கானது தனிப்பட்ட ஆலோசனைகளை வழங்குகிறது. கிறிசாலிஸ் கவுன்சிலிங் என்பது தொழில் ரீதியாக பயிற்சி பெற்ற மற்றும் அனுபவம் வாய்ந்த கிறிஸ்தவ ஆலோசகர்களின் குழுவாகும்.

எங்கள் சேவைகள் எல்லா வயதினருக்குமானவை மற்றும் இது வாழ்க்கையின் பல்வேறு சவால்களைத் தீர்த்துவைக்கின்றன.

| | |
|---|---|
| **இளம் பிராய நடத்தை** | **நடத்தையில் சீர்கேடு** |
| **பிறரோடு இணைக்கக் குறைபாடு** | **ஆளுமை குறைபாடு** |
| **உறவுமுறை சவால்கள்** | **உளவியல் / உணர்வு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள்** |
| **கல்வியில் பின்தங்கிய நிலை** | **மன அழுத்தம் / திடீர் அதிர்ச்சி** |
| **தொழில் தொடர்பான பிரச்சினைகள்** | **மது / போதைப்பொருளுக்கு அடிமை** |
| **குடும்பம் / தம்பதிகள்: திருமணத்திற்கு முன், திருமணத்திற்கு பின்** | **ஆவிக்குரிய போராட்டங்கள்** |
| **பெற்றோர் / குழந்தைகள் / உடன்பிறந்தவர்கள் / சக வயதினர்** | **வாழ்வியல் முன்னேற்ற ஆலோசனை** |

கிரிசலிஸ் கவுன்சிலிங் சேவைகளுக்கான கட்டணங்கள் குறைவானதாகவும் சுலபமாக செலுத்தக்கூடியதாகவும் இருக்கிறது.

எங்களிடம் உள்ள கைதேர்ந்த ஆலோசகர்களில் ஒருவருடன் சந்திப்பைத் திட்டமிட கீழ்க்காண்ட வழிமுறைகளில் அணுகவும்:

**Website: chrysalislife.org**

**Phone:** +91-80-25452617 அல்லது கட்டணமில்லா அழைப்பு (இந்தியாவிற்குள்) 1-800-300-00998

**Email: counselor@chrysalislife.org**

கிறிசலிஸ் கவுன்சிலிங் என்பது ஆல் பீப்பிள் சர்ச் ரூ வேர்ல்டு அவுட்ரீச் செய்யும் ஊழியமாகும்.

# ஆல் பீப்பிள் சர்ச்சில் பங்குதாரராக இருத்தல்

ஆல் பீப்பிள் சர்ச்சின் ஊழியர்கள், ஒரு உள்ளூர் திருச்சபையாக தன் சொந்த எல்லைகளுக்கு அப்பால், இந்தியா முழுவதும், குறிப்பாக வட இந்தியா முழுவதும் ஊழியம் செய்வது மட்டுமல்லாமல், (அ) தலைவர்களைப் பெலப்படுத்துதல், (ஆ) இளைஞர்களை ஊழியத்திற்கு ஆயத்தப்படுத்துதல் மற்றும் (இ) கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டியெழுப்புதல் ஆகியவற்றில் சிறப்பு கவனம் செலுத்துகின்றனர். இளைஞர்களுக்கான பல பயிற்சிக்கூடங்கள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கான கருத்தரங்குகள் ஆண்டு முழுவதும் நடத்தப்படுகின்றன. மேலும், வார்த்தையிலும் ஆவியிலும் விசுவாசிகளை ஆயத்தப்படுத்தும் நோக்கத்துடன் ஆங்கிலத்திலும் பிற இந்திய மொழிகளிலும் புத்தக வெளியீடுகளின் பல ஆயிரக்கணக்கான பிரதிகள் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன.

ஒரு முறை தரும் நிதியாகவோ அல்லது மாதாந்திர நிதியாகவோ அனுப்புவதன் மூலம் எங்களுடன் நிதி ரீதியாக பங்குதாரராக இருக்க உங்களை அழைக்கிறோம். நமது நாடு முழுவதும் செய்யப்படும் இந்த ஊழியத்திற்காக எங்களுக்கு உதவ நீங்கள் அனுப்பும் எந்தத் தொகையும் பெரிதும் பாராட்டப்படும்.

நீங்கள் அனுப்ப வேண்டிய பரிசுத் தொகையை “ஆல் பீப்பிள் சர்ச்”க்கு காசோலை/ வங்கி வரையோலை மூலம் எங்கள் அலுவலக முகவரிக்கு அனுப்பலாம். இல்லையெனில், எங்களின் வங்கிக் கணக்கு விவரங்களைப் பயன்படுத்தி வங்கிப் பரிவர்த்தனை மூலம் உங்கள் பங்களிப்பை நேரடியாக அனுப்பலாம்.

**வங்கிக் கணக்கின் பெயர்:** All Peoples Church
**வங்கிக் கணக்கு எண்:** 50200068829058
IFSC **குறியீடு:** HDFC0004367
**வங்கியின் பெயர்:** HDFC Bank, 7M/308 80 Feet Road, HRBR Layout, Kalyan Nagar, Bengaluru, 560043, Karnataka, India

***கவனத்தில் கொள்ளவும்:*** *ஆல் பீப்பிள் சர்ச் இந்தியா சார்ந்த வங்கிக் கணக்கிலிருந்து மட்டுமே வங்கி பங்களிப்புகளை ஏற்கிறது. உங்கள் பங்களிப்பைச் செய்யும்போது, விரும்பினால், உங்கள் பங்களிப்பைப் பயன்படுத்த விரும்பும் குறிப்பிட்ட ஆல் பீப்பிள்*

*சர்ச் ஊழியப் பகுதியைக் குறிப்பிடலாம். கூடுதல் விவரங்களுக்கு,* **apcwo.org/give** *என்ற வலைதளத்தைப் பார்வையிடவும்.*

மேலும், உங்களால் முடிந்த போதெல்லாம் எங்களுக்காகவும் எங்கள் ஊழியத்திற்காகவும் ஜெபிக்க மறவாதீர்கள்.

**நன்றி, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!**

## DOWNLOAD THE FREE APP!

*Search for*

**"All Peoples Church Bangalore"**
**in the App or Google play stores.**

Available on the App Store

ANDROID APP ON Google play




*A daily 5-minute video devotional.*
*A daily Bible reading and prayer guide.*
*5-minute Sermon summary.*
*Toolkit with Scriptures on various topics to build faith and information to share the Gospel.*
*Resources with sermons, sermon notes, TV programs, books, music and more.*

*IF YOU LOVE IT, TELL OTHERS ABOUT IT!*

# ஆல் பீப்பிள் சர்ச் வேதாகமக் கல்லூரி

apcbiblecollege.org

இந்தியாவின் பெங்களூரில் உள்ள ஆல் பீப்பிள் சர்ச் வேதாகமக் கல்லூரி மற்றும் ஊழியப் பயிற்சி மையமானது, உபதேச ரீதியாக சிறந்த மற்றும் அறிவார்ந்த ஊக்கமளிக்கும் தேவனுடைய வார்த்தையின் படிப்போடு கூட, ஆவியானவரால் நிரப்பப்பட்டு, அபிஷேகம் செய்யப்பட்டு, பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையில் ஊழியம் செய்வதற்கு ஆயத்தப்படுத்தவல்ல பயிற்சியை வழங்குகிறது. தேவனுடைய வார்த்தையில் ஆழமாக வேரூன்றியிருக்கும் தேவனுக்கேற்ற குணநலன்களோடு, அடையாளங்கள், அதிசயங்கள் மற்றும் அற்புதங்களால் வல்லமையான செயல்களை ஊழியத்தில் நடத்திக்காட்டும் ஒரு பூரண மனுஷனை எங்களால் உருவாக்க இயலும் என்று நாங்கள் நம்புகிறோம்.

ஆல் பீப்பிள் சர்ச் வேதாகமக் கல்லூரியில் (APC-BC), ஆரோக்கியமான போதனையோடு, தேவனுடைய அன்பை வெளிக்காட்டுவதையும், அபிஷேகம் மற்றும் பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னத்தையும் மற்றும் தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட கிரியையையும் வலியுறுத்துகிறோம். பல இளைஞர்களும் வாலிப வயதின் பெண்களும் தங்கள் வாழ்க்கையின் மீதான தேவனுடைய அழைப்பை நிறைவேற்றுவதற்காக பயிற்சியளிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளனர்.

நாங்கள் மூன்று பாட திட்டங்களை வழங்குகிறோம்

- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம், ஒரு வருட படிப்பு சான்றிதழ் (C.Th.)
- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம், இரண்டு வருட டிப்ளமோ படிப்பு (Dip.Th)
- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம், மூன்று வருட இளங்கலை படிப்பு (B.Th.)

ஒவ்வொரு வார நாட்களிலும், **திங்கள் முதல் வெள்ளி வரை,** இந்திய நேரப்படி **காலை** 9:00 **முதல் நண்பகல்** 12 **மணி வரை** (UTC+5:30) வகுப்புகள் நடைபெறும். நாங்கள் மூன்று வழியில் கற்பதற்கான விருப்பத் தேர்வுகளை வழங்குகிறோம்.

- **வளாகத்தில் கற்றல்:** வளாகத்தில் நேரடியாக வகுப்புகளில் கலந்து கொள்ளுதல்
- **இணைய வழியில் கற்றல்:** ஆன்லைனில் நேரடி விரிவுரைகளில் கலந்து கொள்ளுதல்
- **மின்னஞ்சல் வழியாக கற்றல்: apcbiblecollege.org/elearn** ஆன்லைன் செயலி மூலம் தானாகக் கற்றுக்கொள்ளுதல்

**இணைய வழியில் விண்ணப்பிக்கவும்,** மற்றும் கல்லூரி, பாடத்திட்டம், படிப்புக்கான தகுதி, கல்விச் செலவுகள் பற்றிய கூடுதல் தகவலுக்கும் மற்றும் விண்ணப்பப் படிவத்தைப் பதிவிறக்கம் செய்யவும், தயவுசெய்து **apcbiblecollege.org** என்ற இணையதளத்திற்குச் செல்லவும்.

எழுப்புதல் என்பது, தேவன் ஒரு கூட்ட ஜனங்களை சந்திப்பதாகும். அது தேவனுடைய பிரசன்னம் இறங்கி வரும் காலம். தேவனுடைய பிரசன்னம் இறங்கி வரும்பொழுது, திருச்சபையில் பல மாற்றங்கள் நிகழ்கின்றன. தேவனிடம் எழுப்புதல் வேண்டும் என்று நாம் ஜெபிக்கிறோம். ஆனால், தேவனுடைய பிரசன்னம் இறங்கிவந்து நம்மை சந்திக்கும்படி, அந்த நேரத்துக்காக நாம் ஆயத்தமாக இருக்கிறோமா? ஆகவே, எழுப்புதல் வரும்போது நாம் ஆயத்தமாக இருக்க வேண்டியது மிகவும் அவசியம்!

எழுப்புதல் வரும்போது திருச்சபை எப்படி இருக்கும்? நாம் எழுப்புதலின் மத்தியில் இருக்கும்போது, உங்களுக்கும் எனக்கும் என்ன நிகழும்? அவ்வாறாக, தேவனுடைய பிரசன்னம் நம்மத்தியில் இறங்கி வரும்பொழுது, உன்னதத்திலிருந்து நம் மீது ஆவி ஊற்றப்பட்டால், அது ஆவிக்குரிய சந்திப்பு தானே? ஒரு காரியத்தைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால், எழுப்புதலின் நேரங்களில், சபை இப்பொழுது இருப்பதுபோல, இருக்கப்போவதில்லை என்பதை அறிந்துகொள்ளுங்கள். தேவ பிரசன்னம் நம் மத்தியில் இறங்கி வந்து, தேவன் நம்மைத் தொடும்போதும் பரலோகத்திலிருந்து நாம் பெறும் சந்திப்புக்கான காலகட்டத்திற்குள் பிரவேசிக்கும்போது திருச்சபை எப்படி இருக்கும் என்பதைப் படமிட்டுக் காட்டுவதே இச்செய்தியின் நோக்கமாகும்.

அப்படிப்பட்ட தேவ பிரசன்னம் உங்கள் மீது இறங்க ஆயத்தமாக இருங்கள்!

**All Peoples Church & World Outreach,**
# 319, 2nd Floor, 7th Main, HRBR Layout,
2nd Block, Kalyan Nagar, Bangalore 560 043
Karnataka, INDIA

Phone: +91-80-25452617
Email: bookrequest@apcwo.org
Website: apcwo.org